**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.27/2015**

**DW3**

| | | |
|---|---|---|
| **Name** | : | மரு. சுனிதா |
| **Husband's Name** | : | ராஜேஸ்வரன் |
| **Village** | : | |
| **Taluk/District** | : | புதுச்சேரி |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.11.2025.

A1 and 3 present. A2 absent. Petition U/s. 317 Crpc filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் மூத்த மருத்துவ அலுவலராக பணிபுரிகிறேன். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட சார்லஸ் என்பவரின் மருத்துவ குறிப்புகளை எடுத்து வந்து சாட்சி அளிக்குமாறு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. அதன்படி நான் சாட்சிஅளிக்க வந்துள்ளேன். மேற்படி சார்லஸ் என்பவர் ஜிப்மர் மருத்துவமனையில் 2013-ல் சிகிச்சைக்காக ஆஜராகியுள்ளார். அதனால் நான் மருத்துவமனையில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் சாட்சி அளிக்கிறேன். ஆவணங்களின்படி மேற்படி சார்லஸ் என்பவர் 01.04.2013 அதிகாலை 12.57 மணிக்கு அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்கு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக ஜிப்மர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். அவர் சற்று மயக்க நிலையில் இருந்தார். ஆனால் சுயநினைவோடு இருந்தார். எங்கள்பதிவேட்டின்படி அவர் தன்னை அடையாளம் தெரியாத நபர் 31.03.2013 அன்று இரவு 10.10 மணிக்கு அவர் வீட்டு அருகே கல்லால் தாக்கியதாக உள்ளது. சம்பவம் நடந்தபோது அவருக்கு சுயநினைவு தப்பியதாகவும், ஒரு முறை வாந்தி எடுத்ததாகவும், காதில் இருந்து ரத்தம் வடிந்ததாகவும் சொல்லியுள்ளார். அவருடைய நினைவு ஆற்றல் (GCS) 15/15 ஆக இருந்தது. அவரின் ரத்த அழுத்தம் 130/70 ம் நாடித்துடிப்பு 80 ஆகவும் இருந்தது. அவரை பரிசோதனை செய்தபோது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது .

1. இடது கண் சுற்றிய பகுதிகளில் ரத்தம் கன்றி காணப்பட்டது.
2. இடது கண்ணுக்கு கீழ் 4x3 செ.மீ வீக்கமும் தொட்டால் வலியும் உணர முடிந்தது.
3. இடது கண் இமைக்கு கீழ் 2x0.5x0.2 செ.மீ அளவிலான கிழிந்த காயம் ஒன்று காணப்பட்டது.

4.அவருக்கு சிடி ஸ்கேன் எடுத்து பார்த்ததில் இடது முக எலும்பு முறிவு கண்டறியப்பட்டது.

1)அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு நரம்பியல், பல் மருத்துவம், காது மூக்கு தொண்டை மற்றும் கண் ஆகிய துறைக்கு அனுப்பப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு மூளை சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டுள்ளது. பல் மருத்துவர் நிபுணரும் அவருக்கு முகத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டதை உறுதிசெய்துள்ளார். காது மூக்கு தொண்டை நிபுணரும் அவருக்கு அதே கருத்தை தெரிவித்துள்ளார்கள். நரம்பியல் துறை மருத்துவர்கள் அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு தலையில் ரத்தக்கசிவு இருந்ததாக கருத்து தெரிவித்துள்ளார்கள்.

2) நரம்பியல் துறையில் அவர் உள்நோயாளியாக 01.04.2013 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளார். அதே தினம் காலை 8.00 மணிக்கு நோயாளியை பரிசோதனை செய்தபோது அவருடைய GCS அளவு 12 ஆக குறைந்துள்ளது தெரியவந்துள்ளது. வேறு எந்த ரத்தக்கசிவு ஏற்படாமல் இருந்தது. மூளையில் ரத்தக்கசிவு இருந்ததால் அவருக்கு மூளையில் வீக்கம் ஏற்படாமல் இருக்க சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. 01.04.2013 அன்று மாலை 7.00 மணிக்கு அவருக்கு மீண்டும் சிடி ஸ்கேன் எடுத்து பார்த்தபோது அவருக்கு மூளையில் ஏற்பட்ட ரத்தக்கசிவு அதிகமாகி உ ள்ளது தெரியவந்துள்ளது. அவருக்கு மூளையில் ஏற்பட்ட ரத்தக்கசிவு கரைவதற்காக சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு சுயநினைவு குறைந்தால் அறுவை சிகிச்சை செய்யலாம் என்று மருத்துவக்குழு முடிவுசெய்துள்ளார்கள்.

3) 02.04.2013 அன்று அவரை பரிசோதனை செய்தபோது அவருடைய GCS அளவு 12ல் இருந்து 9 ஆக குறைந்துள்ளது. எனவே நரம்பியல் துறை தலைவரின் ஒப்புதல் பெற்று அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிலையில் சுமார் மதியம் 12.30 மணியளவில் அவருடைய சுயநினைவு GCS 3 ஆக குறைந்து அவருடைய நிலைமை மோசமாகி உள்ளது. அவருக்கு சுவாசிக்க இயலாத காரணத்தால் செயற்கை சுவாசம் பொறுத்தப்பட்டது. அவருக்கு இருதய துடிப்பு குறைந்ததால் CPR அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் நிலையில் முன்னேற்றம் எதுவும் இல்லாமல் அவர் மதியம் 03.00 மணிக்கு இறந்துள்ளார் என்று ஆவணங்களில் இருந்து தெரியவருகிறது. அவர் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தபோது அவருடைய மரண வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டுகோள் எதுவும் அனுப்பப்படவில்லை. நான் அவருக்கு வழங்கப்பட்ட புறநோயாளி MLC form சான்று நகல் **எ.ம.சா.ஆ.2 .** அவருக்கு உள்நோயாளியாக சிகிச்சை வழங்கப்பட்டதற்கான மருத்துவ பதிவுகள் **எ.ம.சா.ஆ.**3. அவருக்கு நான் வழங்கப்பட்ட இறப்பு அறிக்கை **எ.ம.சா.ஆ.4.** அவருக்கு வழங்கப்பட்ட Out Patient Record **எ.ம.சா.ஆ.5.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

மருத்துவர் குறிப்புகளில் நோயாளிக்கு காது மூக்கு தொண்டை பிரிவில் இருந்து மருத்துவர் 01.04.2013 அன்று சிகிச்சை அளித்துள்ளார். நேரம் சரியாக

குறிப்பிடப்படவில்லை. ENT மருத்துவரிடம் நோயாளி தன்னை தெரிந்த நபர் கல்லால் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அவர் சிகிச்சைக்கு ஆஜரானதை குறித்து போலிசுக்கு தகவல் அனுப்பட்டது. சட்டம்சார்ந்த மருத்துவ வழக்குகளில் இன்டிமேஷன் கொடுத்தால் போலிசார் நோயாளியிடம் புகார் வாக்குமூலம் பெறுவது வழக்கம். சுயநினைவை பரிசோதனை செய்யும் GCS அளவின் அதிகப்படியான புள்ளி என்பது 15 தான். சிகிச்சைக்கு ஆஜரானபோது GCS( Glasco Coma Scale) 15 ஆக இருந்தது.

**<u>அனுமதியுடன் மறுவிசாரணை -</u>** காது மூக்கு தொண்டை நிபுணரிடம் மட்டும் தான் நோயாளி தன்னை தெரிந்த நபர் தாக்கியதுபோல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.